வரையறுக்கப்பட்ட மஹாவலி ஆலோசனைச் சேவை பணியகம் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிர்வாக தரப்பினரதும் பொறுப்புக்கள்.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனமொன்று தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கப்பட வேண்டிய பிரகாரமான கால எல்லைக்குள் அந்த நிறுவனங்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலப்பகுதியில் தயாரிக்கப்படுகின்றமை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களுக்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திலும் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதி முதல் ஆறு மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பொறுப்புவாய்ந்த நபரினால் உறுதிப்படுத்தப்பட்டமையை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த சேண்டும்.

**2.1 நிதிக் கூற்றுக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கம்பனியின் முன்னாள் தலைவரை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையின் செயற்பாட்டு காலம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்ததன் பின்னர் கம்பனிக்காக தலைவர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன், 2019 மார்ச் 25 ஆம் திகதி மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரால் 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் கம்பனிக்காக பணிப்பாளர் சபை | ஏற்றுக்கொள்கின்றோம். 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(அ) பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்ததுடன், | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க பணிப்பாளர் சபை அங்கீகரித்த நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அங்கத்தவராக இலங்கை மஹாவலி அதிகார சபையின் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், சனாதிபதி செயலாளரின் 2019 நவம்பர் 28 ஆம் திகதிய PS/SP/SB/Circular/02/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அவர்கள் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்ததனர். 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படாதிருந்தமையால் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1)(இ) பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | அது வரையிலும் பணிப்பாளர் சபை வெற்றிடமாக இருந்தமையால் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், தற்போது பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று மிக விரைவில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். |

## 2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதி 9/2009 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி. | கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை வெளிச் செல்லல் தொடர்பான அறிக்கை மிகவும் முறையாக பேணிச் செல்ல வேண்டியிருந்தமையால் சேவை நிலையமொன்றில் இருக்கின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளாது கைவிரல் அடையாள இயந்திரம் ஒவ்வொரு அலுவலகத்திலும் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியின் உத்தியோகத்தர்களின் வருகை, வெளிச் செல்லுகை பதிவுகளுக்காக கைவிரல் அடையா இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் இந்த நிறுவனத்தை மூடிவிடுவற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் கைவிரல் அடையாள இயந்திரத்தை பொருத்தி வருகை மற்றும் வெளிச் செல்கைகளுக்காக உள்ளக நிர்வாகத்தை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 | சந்தை விலை ஒப்பீட்டு முறைமையில் கூறுவிலை கோரப்படாமல் கம்பனியின் | உரிய விடயங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவு. | வருமான வரி கணிப்பிடுவதற்காக தனியார் கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக முன்னைய ஆண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் முறையே ரூபா 82,500 மற்றும் ரூபா 75,000 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. | எடுக்கப்பட்டுள்ளது. கம்பனியின் வரி நடவடிக்கைகள் தொடர்பான செயற்படுகின்ற கணக்காய்வு கம்பனி அதற்கு முன்னர் கம்பனியின் கணக்காய்வாளராகவும் செயற்பட்டிருந்தனர். இந்த கம்பனி தொடர்பாக அவர்களுக்கு காணப்பட்ட தொழில் தகைமை அனுபவம் மற்றும் திறன்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு வருமான வரி செலுத்தும் நடவடிக்கைகளை உயர்ந்த தொழிற் தகைமை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டமையை மேலும் குறிப்பிடுகின்றோம். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | கோவையின் பிரகாரம் கூறுவிலைகள் கோரி வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு கொள்கைகளின் அத்தியாயம் 17 இன் 19 ஆம் பிரிவு | நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கம்பனிக்கு சொந்தமான ரூபா 2,513,233 கிரயமான 20 நிலையான சொத்து விடயங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு | உரிய விடயங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக பணிப்பாளர் சபை அதிகாரம் தேவையாக இருந்ததுடன், தற்போது பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளமையால், உடனடியாக | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள தற்போது பயன்படுத்தப்படுகின்ற நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட வழுவை மீள் திருத்துவதற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சொத்துக்கள் முழுமையான பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதிலும், நிலையான சொத்துப் பதிவேட்டில் அந்த சொத்துக்கள் அகற்றப்படாதிருந்தை மயை குறிப்படுவதுடன், தாமதமின்றி அந்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். நிலையான சொத்தாக கவனத்தில் கொள்ள முடியாதிருந்த சொத்துக்களை நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றி கணக்குகளை சரிசெய்வதற்காக உடனடியாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய ஆலோசனைகள் என்னால் தற்போது வழங்கப்பட்டுள்ளது. | மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 செப்தெம்பர் 25 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/19/2550/104/076 இன் மூலம் இந்த கம்பனியை கலைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த | 2019 ஒக்தோபர் 15 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம 19/2770/104/083 இன் பிரகாரம் கம்பனிக்குரிய விடயப் பொறுப்பு அமைச்சுக்கு | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், பின்னர் 2019 ஒக்தோபர் 15 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/19/2770/104/083 இன் பிரகாரம் கம்பனி விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் 2021 பெப்ரவரி வரையும் கம்பனியை கையளித்தல் இடம் பெற்றிருக்கவில்லை. | கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2019 பெப்ரவரி 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவினால் கம்பனியின் முகாமைத்துவம் அல்லது தலைவர் நிதி ரீதியான மோசடி தொடர்பாக இருக்குமாயின் அதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிறுவனத்திற்கு பாதகமற்ற முறையில் தீர்க்கப்பட வேண்டியிருந்தமையும் அதற்காக முறையான விசாரணையொன்று ஆரம்பித்து ஒரு மாத காலத்திற்குள் செயற்குழுவிற்கு அறிக்கையிட வேண்டியிருந்தமையும் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிதி மோசடி தொடர்பாக சந்தேகத்திற்குரிய தலைவர் மரணமடைந்திருந்ததுடன், அறவிடுவதற்காக எடுக்கக் மூடிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆராயப்படுகின்றது. | பொது முயற்சிகள் செயற்குழுவின் பரிந்துரையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அசவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பொலன்னறுவை மாவட்ட செயலாளரால் ஹிங்குரக்கொட சமுர்த்தி சமூக தள வங்கி கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் மஹாவலி ஆலோசனைச் சேவை பணியகம் (தனியார்) கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2017 திசெம்பர் 15 ஆக இருந்த போதிலும், நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், 2018 யூலை 15 ஆம் திகதி கம்பனியால் அந்த நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | தற்போது உரிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்தது. ஹிங்குரக்கொட சமுர்த்தி சமூக அடிப்படை வங்கி கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்குரிய இறுதி வேலைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு 2020 மார்ச் மாதம் சமுர்த்தி வங்கிக்கு கையளிக்கப்பட்டதுடன், அதில் காணப்பட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் மிகுதி பணத்தை எங்களுக்கு வழங்குவதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. | கம்பனியினால் கையேற்கப்பட்ட நிர்மாண உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் சரியான நியமங்களுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள திமுதுவெவ வீடமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கம்பனியால் ரூபா 11,998,130 தொகைக்கான இறுதி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், திமுதுவெவ கீழ் அபிவிருத்தி செய்யும் போது விடயப் பரப்பிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டமையினால் அந்த மொத்த தொகையும் செலுத்தாமல் இருப்பதற்கு திமுதுவெவயை மீளமைப்பு செய்வதற்குரியதாக நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை செய்திருந்தது. அதன் பிரகாரம் குழுவினால் கம்பனிக்கு செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட மொத்த தொகை ரூபா 4,840,515 ஆக இருந்ததுடன், அதில் வழங்கப்பட்டுள்ள ரூபா 2,971,485 தொகையான முற்பண தொகையில் குறைத்ததன் பின்னர் ரூபா 1,869,030 தொகை மாத்திரம் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிக்கப்பட்ட நட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள விலைகளை விட கணிசமான அளவு குறைவானதாகும். நட்டத்திற்கு காரணமான விடயங்கள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களாகும். கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் ரூபா 7,157,615 தொகையான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது என கணக்காய்வு அவதானிப்பின் மூலம் அறிக்கையிடப்பட்ட போதும், கம்பனியால் கணக்கீடு செய்யப்பட்ட பிரகாரம் தேறிய நட்டம் ரூபா 2,621,669 மாத்திரமாக இருந்தது. செயற்திட்டத்தை செய்யும் போது நிறந்தரமாக | ஒப்பந்த உடன்படிக்கை விடயப் பரப்பின் பிரகாரம் மாத்திரம் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அங்கீகாரம் இன்றி மேலதிக வேலைகளை மேற்கொண்டு கம்பனிக்கு நட்டம் ஏற்பட்டிருக்குமாயின் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து உரிய நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம் கம்பனிக்கு ரூபா 7,157,615 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | சேவை பங்களிப்பாளர்களினால் எழுத்து மூல உடன்படிக்கைக்கு புறம்பான வேலை நடவடிக்கைகளை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டமையாகும். அரசாங்கத்தின் அமைச்சாக எழுத்து மூலமின்றி கிடைத்த ஆலோசனையின் பிரகாரம் கம்பனியினால் ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக வேலை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறாதிருந்தமையால் இந்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (இ) | கம்பனி கணேவல அணை மீளமைப்பு செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 1,730,055 தொகையான உடற்பயிற்சி பாதுகாப்பு முற்பண பிணையின் மீண்டும் செலுத்தாதிருந்த ரூபா 1,000,089 தொகை மிகுதி சேமிப்பு பணம் மற்றும் ரூபா 419,421 தொகையான நிறுத்தி வைத்தல் தொகையையும் உள்ளடக்கி ரூபா 3,149,565 தொகையான நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றோம். அது வரையில் கம்பனியை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக இந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் நிறுத்தி வைக்கப்பட்ட பணமான ரூபா 419,421 தொகை கம்பனிக்கு அறவிடுவதற்கு முடியுமாக இருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாரு கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதிப் பெறுமதி ரூபா 47,074,872 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 4,176,453 பெறுமதியான கணக்கு மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம். உரிய பணம் தொடர்பாக பொறுத்தமான தீர்வொன்றை எடுப்பதற்காக புதிய பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 24,170,130 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதியொன்று காணப்பட்டதுடன், அதில் ரூபா 8,576,246 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்த மீதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ஆலோசனைச் சேவைகளுக்குரிய ரூபா 7,991,483 தொகையான 04 வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றோம். கணக்குகளில் சரிசெய்வதற்காக உரிய பிரிவுகளில் ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற செயற்திட்டம் மற்றும் பொறியியல் பிரிவுகளின் தலைவர்களாக சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் இருவர் முறையே 2018 திசெம்பர் 31 ஆம் திகதி மற்றும் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி விலகிச் சென்றிருந்ததுடன், அத்திகதி முதல் அந்த பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. 2019 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டம் மற்றும் பொறியியல் பிரிவுகளில் எந்தவொரு புதிய செயற்பாட்டு நடவடிக்கைகளும் கையேற்கப்படாதிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் கம்பனியின் ரூபா 90.2 மில்லியன் தொகையான செயற்பாட்டு வருமானம் 2019 ஆம் ஆண்டின் போது 29.8 மில்லியன் வரை அதாவது 67 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. | கம்பனியை களைப்பதற்கு முன்னர் காணப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானம் காணப்பட்டயையினால் இந்த பதவிகளை நிரப்புதல் கைவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த கொள்கை ரீதியான தீர்மானம் மாற்றப்பட்டமையினால் ஆட்சேர்ப்புக்கள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றது. | கம்பனியின் நிர்வாக பிரச்சினைகளுக்கு தீர்வுகள் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2013 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த கீழ் மல்வத்து ஓயா செயற்திட்டம் மற்றும் கிவுல் ஓயா நீர் தேக்க செயற்திட்டத்தின் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பதற்காக கம்பனிக்கு | ஏற்றுக்கொள்கின்றோம். அந்த பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் வன | கம்பனிக்கு அறவிட வேண்டிய சகல பணத்தையும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டிய ரூபா 2,642,750 தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு திணைக்களத்தினால் வழங்க வேண்டிய அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் உடனடியாக இந்த பணத்தை அறவிடுவதற்கு முடியுமாக உள்ளதுடன், தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மொறகஹகந்த சுற்றாடல் சுற்றுலா விடுதி மற்றும் ஆரம்பித்தல் மேடையின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக உப ஒப்பந்தம் வழங்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமையினால் கம்பனிக்கு அறவிட வேண்டிய ரூபா 20.2 மில்லியன் தொகை இது வரை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | கம்பனிக்கு அறவிட வேண்டிய பணத்தை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மஹாவலி ஆலோசனைச் சேவை பணியகத்திற்கு சொந்தமான ரூபா 16,749,105 பெறுமதியான சொத்துக்கள் காணப்பட்ட போதும் உரிய சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியினால் பௌதீக மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது அரசாங்கத்தின் சொத்துக்களை சான்றுறுதிப்படுத்துவதற்காக உரிய சொத்துக்கள் மெய்மெய்யாய்வு திட்ட முறைமையின் பிரகாரம் நியமிக்கப்பட்ட சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டின் போது இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மெய்மெய்யாய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | கிவுல் ஓயா நீர் தேக்கம் மற்றும் கீழ் மல்வத்து ஓயா நீர் தேக்க செயற்திட்டங்களின் ஆலோசனை சேவைகளை வழங்கவதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை முறையே 2015 திசெம்பர் 31 ஆம் | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றோம். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூலம் இன்னும் உரிய அங்கீகாரம் கிடைக்கப் | உடன்படிக்கைக் காலத்தின் பின்னர் வழங்கப்பட்ட மேலதிக பிரதிகளுக்காக செலவிடப்பட்ட பணத்தை |

திகதியிலும் 2017 திசெம்பர் 04 ஆம் திகதியிலும் முடிவடைந்திருந்த போதிலும், உடன்படிக்கைக் காலத்தை நீடிக்காமல் அந்த செயற்திட்டங்களின் சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீட்டு வரைவு அறிக்கைகளுக்கு மேலதிகமாக 37 பிரதிகள் 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 198,000 தொகையான மேலதிக செலவினம் ஒன்று கம்பனிக்கு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறே மல்வத்து ஓயா செயற்திட்டத்திற்காக உப அறிக்கை (Addendum) 23 பிரதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், உப அறிக்கை வழங்கும் போது அறவிடு வேண்டிய கட்டணம் தொடர்பாக ஆலோசனை உடன்படிக்கையின் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

பெறாதிருந்தமையால் இது வரை நிர்மாண மதிப்பீட்டு பிரதி பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கையின் பிரதியாக இருந்ததுடன், அது வரைவு அறிக்கை மாத்திரமாகும். வரைவு அறிக்கைக்காக தனியாக அறவிடுதல் கம்பனியினால் மேற்கொள்ளப்படாதிருந்த துடன், சகல செலவினங்களையும் உள்ளடக்கிய தொகையும் வழங்கப்பட்டதன் பின்னர் அறவிடுவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளல் பொதுவான நடைமுறையாகும்.

அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கைக் காலம் முடிவடைந்துள்ள உடன்படிக்கைக் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.